# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## SESSIONS CASE NO. 39/2021

## Deposition of Witness for : PW 1

**Name** : திரு. வெங்கடேசன்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-06-2023.**

**(Accused present)**

முதல் விசாரணை -

நான் தற்போது பெரியகனந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என் தாயார் லட்சுமியம்மாள் நிலத்தில் தனியாக வசித்து வந்தார். எனது தாயார் வழக்கமாக விவசாய கூலி வேலைக்கு காலையில் சென்று மாலையில் வீடு திரும்புவார். அன்று காலை முதலே என் தாயாரை காணாததால் நான் என் மாமா ஆனந்தன், தம்பி தேவராஜன் ஆகியோரை விசாரித்தேன். பின்னர் நாங்கள் மூவரும் நிலத்தில் இருக்கும் வீட்டிற்கு சென்று பார்த்தோம். வீடு திறந்து இருந்தது. என் தாயார் குடியிருந்த வீட்டில் கட்டில் அருகே ரத்தம் சிந்தி இருந்தது. என் தாயாரின் டிரங்க் பெட்டி திறந்து இருந்தது. அக்கம் பக்கம் நாங்கள் தேடிப் பார்த்ததில் என் தாயார் பக்கத்து நிலத்துக்காரர் பாண்டியன் கிணற்றில் பிணமாக மிதந்து கொண்டு இருந்தார். உடனே கிராம நிர்வாக அதிகாரிக்கு தகவல் கொடுத்தோம். தீயணைப்பு துறையினர் பிணத்தை கிணற்றில் இருந்து வெளியே எடுத்தார்கள். என் தாயார் அணிந்திருந்த 3 பவுன் செயின், மாட்டல் 3/4 பவுன், கம்பல் 1/2 பவுன் ஆகியவை காணவில்லை. பிரேதத்தை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் கலசபாக்கம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு தான் அ.சா.ஆ.1 ஆகும். மறுநாள் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் நடந்ததை கூறினேன். இந்த

கொலையானது நகை திருடுவதற்காக நடந்துள்ளது. அந்த நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு போட்டு பெற்றுள்ளேன். அடுத்த வாய்தாவிற்குள் அந்த நகைகளை நான் கொண்டு வருகிறேன். (அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க சான்று பொருட்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/- வெங்கடேசன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.